Registered as a News paper in Ceylon விலை சதம் 10



ஜரா பீடி கம்பெனி; கொழும்பு-14

ஈழநாடு
THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [1-8-67] இதழ் 171
யாழ்ப்பாணம்பிலவங்க ஆடி 16 ரபிஆகிர் செவ்வாய்க்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# நீதிமன்ற 'சமன்ஸ்' இனி சிங்களத்தில் அனுப்பப்படும்

## நீதி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, திங்கள்

**நீதிமன்றங்களினுல் இப்பொழுது ஆங்கிலத்தில் வழங்கப்பட்டு வரும் கட்டளைகளை (சமன்ஸ்) சிங்களத்தில் வழங்கும்படி நீதி அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை நீதி மன்றங்களில் அமுல்நடத்தும் கொள்கையைத் தீவிரப்படுத்தும் நடவடிக்கையாகவே நீதி அமைச்சர் திரு. ஏ. எப். விஜயமானே இவ்வித உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக நீதி அமைச்சர் பல புதிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

நீதிமன்றங்களில் தனிச் சிங்களச் சட்டம் திருப்திகரமான முறையில் செயல்படுத்தப்படவில்லையென பார்லிமெண்டில் சில அங்கத்தவர்கள் எடுத்துக்கூறியதைத் தொடர்ந்தே அமைச்சர் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

"ஆபாசம், ஆடைக்குறைப்பு:

## இன்றைய தமிழ் சினிமா வியாபாரமாகி விட்டது"

### வட்டுக்கோட்டையில் கலையரசு

சங்கானை, திங்கள்

"இன்றைய தமிழ் சினிமாப் படங்கள் கலையை வளர்ப்பதாக இல்லை. சினிமாப் படங்கள் ஆபாசத்திற்கும் ஆடை குறைப்பிற்கும் முதலிடம் கொடுத்து கவர்ச்சியைக்காட்டி காசு சேர்க்கும் ஒரு வியாபாரமாகிவிட்டது. நாடகங்களையும் சிலர் சினிமாப்பாணியில் நடாத்தி நாடகங்களைக் கொலைசெய்கின்றனர். இதைவிட்டு நமது பாரம்பரிய பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணும் வகையில் நாடகக்கலையை நாம் வளர்க்கவேண்டும்" என்று கலையரசு சொர்ணலிங்கம் குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி வனஜா கலாமன்றத்தாரின் கலைவிழாவில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னுர். மேற்படி கல்லூரித் திறந்த வெளியரங்கில் இக்கலைவிழா நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில், "மாணவர்கள் படிப்பிற்கு முதலிடம் கொடுக்கவேண்டும். பண்பாட்டுச் சிறப்பும் கருத்துச் சிறப்பும் மிகுந்த ஆபாசமற்ற நாடகங்களைப் பழகி மேடையேற்ற வேண்டும். இதனுல் மாணவர்கட்கு மட்டுமல்ல சமுதாயத்திற்குமே மிகுந்த நன்மையேற்படும்" என்று கூறினுர்.

திரு. எஸ். தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு எஸ். பாலசுப்பிரமணியம் வரவேற்புரை கூறினுர். கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை ஆசிரியர் கருணுநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மன்றக் காரியதரிசி நன்றியுரை கூறினுர்.

## ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றவர்கள் என்ன ஆனுர்கள்?

### மயிலிட்டி 3 மீனவர்களை 3 நாட்களாகக் காணவில்லை

காங்கேசன்துறை, திங்கள்

மயிலிட்டியிலுள்ள மூன்று மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று மூன்றுநாட்களாகியும் இன்னும் கரை திரும்பவில்லை.

இம்மூன்றுபேரும் ஒரே வீட்டில்வசிப்பவர்கள். "எங்கள் செல்வி" என்ற இயந்திரப்படகில் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற அருணுசலம், சின்னக்கிளி, இரத்தினசிங்கம் ஆகிய மூவருமே இன்னும் கரையை வந்தடையாதவர்களாவர். இவர்களைத் தேடி இப்போது இயந்திரப்படகுகள் படையெடுத்துள்ளன. மயிலிட்டிக் கரையில் இவர்களின் உறவினர்கள் கடலைப் பார்த்தவண்ணம் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

## மட்டக்களப்பு மேயருககு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செவ்.

தமிழரசு வாலிப முன்னணியின் விசேஷ ஆலோசனைக் கூட்டம் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றபோது வாலிபமுன்னணியின் தலைவர் திரு செ. இராசதுரை மட்டக்களப்பு மாநகரசபையின் மேயராகத் தெரிவு செய்யப்பட்டதையொட்டி அவருக்கு யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் பிற்பகுதியில் ஒரு வரவேற்பளிக்க ஒழுங்குகள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வாலிபமுன்னணியின் நீண்டகால அங்கத்தவராக இருந்துவரும் திரு. ஆ. ஹென்றி சமாதான நீதிபதியாக்கப்பட்டதை முன்னிட்டு ஒரு விருந்துபசாரமளித்து கௌரவிப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### புதிய உபதலைவர்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபையின் புதிய உபதலைவராக திரு. மு. செல்லத்துரை தெரிவு செய்யப்பட்டுள்ளார். கூட்டத்துக்கு கிராமச

வர் திரு. சு. கந்தசுவாமி தலைமைவகித்தார்.

வடபகுதி அஸைஸ் விசாரணை

## 50 ரூபா கள்ளநோட்டுகள் ஒரு கட்டு வைத்திருந்தார்

### வேலணை கள்ள நோட்டு வழக்கில் சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**'ஒவ்வொரு நூறு ரூபாய் பெறுமதியான கள்ள நோட்டுக்கும், அரைப் பங்கு பெறுமதியான நல்ல நோட்டு தரவேண்டும் என இரண்டாம் எதிரி கூறினுர். 2-ம் எதிரி இருபது ஐம்பது ரூபா கள்ள நோட்டுகளை ஒரு கட்டாக வைத்திருந்தார்.**

கள்ள நோட்டு வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சப் இன்ஸ்பெக்டர் எஸ். பாஸ்கரன் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் 62-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் திகதிக்கும் நவம்பர் 1-ம் திகதிக்குமிடையில், வேலணையிலும் வேறு இடங்களிலும் கள்ள நோட்டு என்று அறிந்துகொண்டு சதி செய்ய 1-ம் எதிரி மயில்வாகனம் வைத்திலிங்கம் உடந்தையாக இருந்தாரென்றும், அக்டோபர் 31-ம் திகதி, நல்ல நோட்டுக்கள் புழக்கத்திலிருந்த போது 2-ம் எதிரி பொன்னையா கதிரேசு கள்ள நோட்டு என அறிந்துகொண்டு, இரண்டு கள்ள நோட்டுகளை செலுத்தப் பார்த்தாரென்றும், அதே இடத்தில் அதே நேரத்தில் இரண்டாம் குற்றச்சாட்டில் விபரிக்கப்பட்டிருப்பதுபோல், இருபது, ஐம்பது ரூபா கள்ள நோட்டுக்களை நல்ல நோட்டுக்கள் போல் பாவிக்கலாம் என்று 2-ம் எதிரி கதிரேசு வைத்திருந்தார் என்றும் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் புறக்டர் எஸ். நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானுர். இரண்டாம் எதிரி சார்பில்அட்வகேட் வீ. இரகுபதி அட்வகேட் ஆர். உருத்திராவின் உதவியுடனும், புறக்டர் வி. நடராசா, புறக்டர் கே. பரமசிங்கம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிகளுக்காக புறக்டர் கந்தையாபிள்ளையினுர் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் இரத்தினேசர் ஆஜரானுர்.

என். பாஸ்கரன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: அக்டோபர் 30ம் திகதி கள்ளநோட்டுப்பற்றி எனக்குத்தகவல் கிடைத்தது. என்னிடம் ஒரு 50 ரூபா நோட்டு தரப்பட்டது. நான் சோதனை செய்து பார்த்தபோது அது கள்ளநோட்டு என அறிந்து கொண்டேன். அதன் பின் மார்க்கண்டுவைச் சந்தித்தேன் 1ம் எதிரிக்குசோமசுந்தரம் என்பவர் மார்க்கண்டுவை அறிமுகம் செய்துவைத்தார், 1ம்எதிரி நோட்டு எவ்வளவு தொகையென்ருலும் தரமுடியும் என்று கூறினுர். இதற்காக வேலணைக்கு போக தீர்மானித்தோம். நான் உடனே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தகவல் கொடுத்த பின் 31-ம் திகதி அதிகாலை 1 மணிக்கு வீட்டிற்கு சென்றேன். காலை 4-45 மணிக்கு பொலிஸ் நிலையத்திற்கு சென்று சார்ஜண்ட் மெண்டிசுடன் சென்றேன். 1-ம், 2-ம் எதிரிகள் கார் நின்ற இடத்திற்கு வந்தனர். அவர்களும் காரில் ஏறிக்கொண்டனர் ஒவ்வொரு 100 ரூபாவிற்கு எவ்வளவு தர வேண்டுமென மார்க்கண்டு கேட்டார். அரைப்பங்குதரவேண்டும் என 2-ம் எதிரி கூறினுர். 1-ம் எதிரி 5 வீதம் கமிஷன் கொடுக்க வேண்டுமென்ருர். வேலணையை நோக்கி காரில் சென்ருேம். காரில் நானும், மார்க்கண்டுவும், சார்ஜண்ட் மெண்டிசும், 1-ம், 2-ம எதிரிகளும் சென்ருேம்.

பிரதான வீதிவழியாக சென்று கொண்டிருந்த போது 2-ம் எதிரி காரை நிறுத்தச் சொன்னுர். 2-ம் எதிரி இரண்டு ஐம்பது ரூபா வைக்கொண்டுவந்து மார்க்கண்டுவிடம் கொடுத்தார். அவ்விரு நோட்டுகளும்கள்ள நோட்டுகள் என அறிந்து கொண்டேன். 1-ம், 2-ம் எதிரிகள் நாங்கள் கேட்ட கள்ளநோட்டுக்களை கொண்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமயங்கள், நம்மைப் பிரித்து வைக்கும் தடைச் சுவருகளாகவே இப்போது இருக்கின்றன. சமயத்தின் அடிப்படை நோக்கமே நமது ஆணவத்தை நீக்கி, மனித குலமனைத்தையும் ஓர் அன்புக் குடும்பமாக்க வேண்டுமென்பதுதான்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 380.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி மீ 16உ (1-8-67)


## திருமலை துறைமுக திட்டம் எங்கே?

திருக்கோணமலைத் துறைமுகத்தில் இறங்கு துறையை அபிவிருத்தி செய்வதற்குத்தான் இம்முறை நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருக்கோணமலைத் துறைமுகத்தை விருத்தி செய்வதென்றும் அதை ஒரு சுதந்திர துறைமுகமாக்குவதென்றும் அங்கு கப்பல் திருத்தும் தொழிற்சாலையொன்றை நிறுவ ஒழுங்கு செய்வதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. துறைமுகத்தை விருத்தி செய்வதுடன் திருக்கோணமலை உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய ஓர் இடமாக முன்னேற்ற முடியுமென்றும் அரசாங்கம் கருதியது. திருக்கோணமலைத் துறைமுகத்தை விருத்தி செய்ய அரசாங்கம் கொண்டுள்ள நோக்கம் பற்றி சென்ற வருட இறுதியில் திருக்கோணமலைக்கு விஜயம் செய்திருந்த சமயத்தில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் விரிவாக எடுத்துரைத்தார்.

திருக்கோணமலை இயற்கைத் துறைமுகத்தை உடையது. உலகநாடுகள் பலவற்றின் நற்பெயரையும் பெற்றது. வல்லரசுகளின் ஆவலைத் தூண்டக் கூடியது. ஒரு காலத்தில் பிரிட்டனின் ஒரு கடற்படைத் தளமாகவும் விளங்கியது. பிரிட்டிஷார் அங்கிருந்த போது இலங்கையர் பலருக்கு அங்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது, பிரிட்டிஷார் வெளியேறிய பின் திருமலைத் துறைமுகம் நவீன முறையில் விருத்தி செய்யப்பட்டு சிறந்த வர்த்தகத் துறைமுகமாக விளங்குமென பலரும் எதிர்பார்த்தனர். ஆனல் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் கூட சீராக நடைபெறமுடியாத நிலை அங்கு நிலவுகிறது.

திருக்கோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதுடன், கப்பல் திருத்தும் தொழிற்சாலை அமைப்பது போன்ற இதர திட்டங்களையும் உருவாக்கி அமுல் செய்யும் பொறுப்பு தேசியமய சேவைகள் அமைச்சரிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது. இந்த அபிவிருத்தி யோசனைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசேஷ அதிகாரி ஒருவரை நியமிக்க தாம் தீர்மானித்துள்ளதாக தேசிய சேவைகள் அமைச்சர் திரு. சுகதாசா தெரிவித்திருந்தார்.

அமைச்சர் இதைத் தெரிவித்து ஏழுமாதங்கள் முடிவடைந்து விட்டன. திருக்கோணமலைத் துறைமுக விருத்தி, சுதந்திர துறைமுகமாக்கும் யோசனை, உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய முறையில் கடற் கரைப் பகுதியை சீராக்கும் திட்டம் ஆகியவைபற்றி அப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட தேசிய சேவைகள் அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர். திருமலைத் துறைமுக அபிவிருத்தி யோசனைகை விடப் பட்டு விட்டதா, அல்லது இறங்கு துறை அமைப்பதுடன் அபிவிருத்தி ஏற்பட்டுவிடுமென எதிர்பார்கப்படுகிறதா?

திட்டங்கள் எதையும் தீர ஆலோசனை செய்து நன்கு ஆராய்ந்த பின்னர் வெளியிட வேண்டும். பின்னர் அவற்றை தாமதமின்றி அமுல் செய்ய வேண்டும். வெறும் யோசனைகளை பெரிது படுத்தி, ''பூலோக சுவர்க்கத்தை இங்கு உருவாக்கி விடுவோம்'' என்று வாய் இனிக்கப் பேசி விட்டு மௌனம் சாதிப்பது அமைச்சர்களுக்கும் நல்லதல்ல, அரசாங்கத்துக்கும் நல்லதல்ல. வாய்ப் பேச்சுக்கும் உறுதிமொழிகளுக்குமே மதிப்பில்லாமல் போய்விடும்.

★ புதிய கண்டுபிடிப்பல்ல ★ வெண்ணெயிருக்க நெய்யைதேடுவதா? ★ எதிர்காலம் சிறக்கஇதுவேவழி

# மாவட்ட சபை

அ. அமிர்தலிங்கம் (வட்டுக்கேட்டை எம். பி.)

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் மன்றத்தில் வட்டுக்கோட்டை எம். பி.யும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் 'மாவட்ட சபை' பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் தரப்படுகிறது.**

இலங்கை பூராகவும் 22 மாவட்டசபைகளை நிறுவி ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னமான கச்சேரி முறையை மாற்றி ஜனநாயகமுறையில் அதிகாரத்தை நடாத்துவதிலும் ஆளுபதில் பங்கு பெறுவதிலும் பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்பதே தேசிய அரசாங்கத்தினதும், தமிழரசுக்கட்சியினதும் நோக்கமாகும். மாவட்ட சபைகள் என்பது இப்போதைய ஒரு புதிய கண்டு பிடிப்பல்ல. மாவட்ட சபைகள் ஜனநாயக ரீதியில் வளரும் ஒரு நாட்டிற்குத் தேவையா, இல்லையா என்ற பிரச்னை மாறி. இன்று அது ஒரு வகுப்புவாதப் பிரச்னையாக மாறிவிட்டது. இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னே மாகாண சுயாட்சி என்ற கோரிக்கை எழுப்பப் பட்டது. கண்டியச் சிங்களவர்களைப் பாதுகாக்க என்ற கோரிக்கையையொட்டி 'டொனமூர்த்திட்டம்' இலங்கைக்கு ஒரு சமஷ்டி முறை ஆட்சிவேண்டுமென்று சிபார்சுசெய்துபின்னர் 'செக்சிக்' குழுகூட சமஷ்டி, அல்லது பிரதேச சுயாட்சி என்பதையே சிபார்சு செய்தது. உள்ளூராட்சிச் சபைகள் முதலியவற்றைப் பரிபாலிக்கும் அதிகாரமுடைய பிரதேச சபைகள் வேண்டும் என்று செய்யப்பட்ட சிபாரிசை 1940-ம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சராயிருந்த காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயகா ஏற்றுக் கொண்டார். பிரதேச சபைகள் அமைக்கவேண்டுமென்பதை திரு. பண்டாரநாகா தனது லட்சியங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தார்.

1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பொழுது தான் தமிழர்கள் சுய ஆட்சிகள் அல்லது பிரதேச சபைகள் பற்றிச் சிந்திக்கத்தொடங்கினர். 1956-ம் ஆண்டு இலங்கைக்கு சமஷ்டி அரசியல் வேண்டுமென்ற கோரிக்கையில் 10 தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

1957-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் திகதி காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா சமஷ்டி அரசியல் முறையை விடுத்து கச்சேரிகளை பிரதேச சபைகளாக மாற்றி அமைக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டுவந்தார்.

### பண்டா—செல்வா ஒப்பந்தம்

1957-ல், ஜூலை மாதத்தில் திரு. பண்டாரநாயக்காவும், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகமும் இலங்கையில் பிரதேச சபைகள் அமைக்கப்பட

தொகுத்துத்தருபவர்:
பொ. நவரத்தினம்

வேண்டுமென்று ஒப்புக்கொண்டு சரித்திரப்பிரசித்தி பெற்ற பண்டா—செல்வா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டனர்.

1957 ஜூலை மாதம் கைச்சாத்தான இவ்வொப்பந்தம் இன்று பெயர் தெரியாமல் போய்விட்டது. சிலபௌத்த பிக்குகளாலும் எதிர்க்கப்பட்டதையடுத்து 1958 ஏப்ரல் 9-ம் திகதி இந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

இதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சம்பூர்ண பெரும்பான்மையை பெற்று தனிக்கட்சியாகவே ஆட்சியைக் கைப்பற்றியது. இருந்தும் இவர்களது முதலாவது சிம்மாசனப்பிரசங்கத்திலும் பின்னர் ஏற்பட்ட கூட்டரசாங்கத்தின் சிம்மாசனப்பிரசங்கங்களிலும் மாவட்ட சபை அமைக்கப்படுமென்றும் கூறப்பட்டது. மாவட்ட சபைகள் எப்படி அமைக்கப் படவேண்டுமென்று பரிசீலனை செய்ய திரு. மகந்தலாவ தலைமையில் ஒழு குழுவும் அமைக்கப்பட்டது. ஆகவே 1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்வரை ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் எல்லாம் மாவட்டசபைகள் அமைப்பதை ஆதரித்தன.

### எதிர்க்கட்சி ஆதரித்தது.

1965- ஆண்டு தேர்தல் முடிந்து எந்த ஒரு கட்சியும் தனியாக அரசாங்கத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டபொழுது மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி மூன்றாவது பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியின் உதவியை நாடியது. அப்பொழுதும் மாவட்டசபைத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. 1960-ல் இத் திட்டத்தை ஏற்கமறுத்து வீழ்சியடைந்த ஐக்கிய தேசியக் கட்சி 1965-ம் ஆண்டு மாவட்ட சபை அமைக்கும் யோசனையை ஏற்றுக் கொண்டது.

தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப்பிரசங்கத்தில் மாவட்ட சபைகள் அமைக்கப்படும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டதும் அதை ஐக்கிய தேசியக்கட்சி, தமிழரசுக் கட்சி இலங்கை சுதந்திர சோஷலிஸ்ட்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், திரு.கே.எம்.பி.ராசரத்தினவின் ஜாதிகவிமுக்திப் பெரமுனை, மக்கள் ஐக்கிய முன்னணி, தொண்டமான்கட்சி எல்லாம் ஆதரித்தன. இந்நிலையில் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் இலங்கையில் உள்ள எல்லாக்கட்சிகளுமே மாவட்ட சபைகள் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தைஆதரித்தன.

### வடக்கு, கிழக்கு பொருளாதாரம்

தற்பொழுது வடகீழ் மாகாணத்தைப் பொறுத்தவரையில் அரிசியிலும், மீனிலும், உப்பு உப உணவுப் பொருட்களிலும் தேவைக்கு மேலாகப் பெற்றிருக்கின்ருேம். இலங்கைக்குத்தேவையான மீன் 75 வீதத்தை வடகிழக்குப் பகுதியே கொடுக்கின்றது. ஏற்றுமதி செய்யப்படும் உப்பு ஆனையிறவிலும், சாவகச்சேரியிலும், கல்லுண்டாயிலும் எடுக்கப்படுகின்றது.

வெண்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, உப்பு, மீன், அரிசி, முந்திரிகைப்பழம் ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை நாங்கள் இலங்கை பூராவும் மட்டுமல்ல ஏற்றுமதி செய்யக் கூடியதாகவுமிருக்கிருேம்.

### வடக்கு வளமான பூமி

என்னைச் சந்தித்த ஒரு இஸ்ரவேல் நிபுணர் யாழ்ப்பாணத்தைப் பார்த்துவிட்டு இதை வரண்ட பூமியென்று கூறுகிருர்கள்; ஆனல் இஸ்ரவேலுடன்ஒப்பிடும்பொழுது இது வளமான பூமியென்றும், இப்பகுதி மக்கள் மட்டும் நாட்டுப் பற்றுடன் உழைப்பில் ஆர்வங்காட்டுவார்களேயானல் இது சொர்க்க பூமியாகமாறும் என்றும் சொன்னுர்.

### வெண்ணெயிருக்க நெய்யை தேடுவதா?

தகுதிக்கே முதலிடம் கொடுக்கப்பட்டதும் நாமும் ஓர் அளவில் அரசாங்கஉத்தி

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

1-8-67
செவ்வாய்க்கிழமை
[ஆடிமாதம்16-ந்திகதி]

நட்சத்திரம் - ரோகணி
திதி தசமி (பகல் 9-07 வரை)
மேல் ஏகாதசி
சுபநேரம் 10-33-12-08
ராகுகாலம்
[3.03-4.33]

மேடம்- பொருள் விரயம்
ரிஷபம்- அரசகவலை
மிதுனம்- வாக்குச்சித்தி
கடகம்- இனப்பகை
சிம்மம்-மனைமகிழ்ச்சி
கன்னி-பாக்கியவிருத்தி
துலாம்- எதிரிகள் வீழ்ச்சி
விருச்சிகம்- சுதூகல மிகுதி
தனுசு- ஆயுத அபாயம்
மகரம்- பிதாவழிச்சுகம்
கும்பம்- தொழிலில் ஏற்றம்
மீனம்- எதிர்பாராத பண வரவு

## நாட்டிலும நகரிலும

சென்ற மாதம் 26-ம் திகதியிட்ட கடிதம் ஒன்று என் கைக்கு நேற்று எட்டியது. ஆங்கிலத்தில் 'டைப்' அடிக்கப்பட்ட அக் கடிதத்தின் மொழிபெயர்ப்பை கீழே முழுமையாக தருகிறேன்;-

ஓம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாயி பாபா
ஓம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாயி பாபா
ஓம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்ய சாயிபாபா

பத்து நாட்களுக்குள் இது இருபது பேருக்கு அனுப்பப் படவேண்டும். பத்து நாட்களுக்குப் பின் அதன் பலாபலனைப்பாருங்கள். இந்தக் கடிதச் சங்கிலித் தொடர்பை தயவுசெய்து முறித்து விடாதீர்கள்.

என்பிரார்த்தனை இதுவே- ஆண்டவனில் எனக்கு நம்பிக்கை உண்டு. மனிதன் நல்வாழ்வு பெற அதிர்ஷ்டத்தை வேண்டுகின்றேன். சிவபெருமானை திரிகரண சுத்தியுடன் வணங்கி அவன் மீது சகல சுமையையும் போடு. அவன் உனக்கு வழி காட்டுவான்.

இப் பிரார்த்தனை உமது நல்ல அதிர்ஷ்டத்துக்காக உமக்கு அனுப்பப்படுகிறது. இது ஆதியில் அவர் கைவழியாக வந்தது. இக்கடிதம் உங்களுக்கு கிடைத்தபின் உங்களுக்கு நல்ல பாக்கியம் கிடைக்கும். இது ஒரு கேலியோ பகிடியோ அல்ல. இக் கடிதத்தை பிரதிசெய்து இன்னும் இருபது பேருக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு அதிர்ஷ்டம் வரவேண்டுமென்று நீங்கள்விரும்பினல் இன்னும் சில நாட்களில் என்ன நடக்கிறதென்று பாருங்கள். இக் கடிதம் உங்களுக்கு கிடைத்த எழுபது மணி நேரத்துக்குள் மற்ற இருபது கடிதங்களும் வெளியே போய்விடவேண்டும்.

[1] அமெரிக்காவில் ஜெனரல் பிராங்கர் என்பவருக்கு இக் கடிதம் அனுப்பப்பட்ட பின் அவருக்கு அறுபது லட்சம் டாலர் கிடைத்தது. ஆனல் அவர் அதை வேறு பேருக்கு அனுப்பத் தவறி விட்டார். இதனல் அவர் மரணமடைந்தார்.

[2] வியட்னுமில் ஜெனரல் அடிஸ் என்பவருக்கு இக் கடிதம் அனுப்பப்பட்டும் அவர் அதை பிறருக்கு அனுப்ப தவறிவிட்டார். அவர் பிரான்சில் மரணமடைந்தார்.

[3] பிலிப்பைன் தீவில் ஜெனரல் காசு என்பவருக்கு இக்கடிதம்கிடைத்ததும் அவர் அதை விநியோகம் செய்ய தவறினுர். ஆறு நாட்களுக்குள் அவர் மரித்தார்.

[4] ஜெனரல் கௌல் என்பவரும் இவ்வாறே சங்கிலித் தொடர்பை அறுத்து உடனே பதவியை இழந்தார்.

[5] இக் கடிதம் கிடைத்த நான்காம் நாள் ஜெனரல் சௌத்திரி சேனைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவ்வளவுதான் அந்தக் கடிதம். எங்கிருந்து வந்தது, யார் எழுதினுர்கள் என்பதற்கு அத்தாட்சியாக மேல் விலாசமோ கீழ் கையொப்பமோ கிடையாது.

இதை இப்பத்தியில் வெளியிட்டதன் மூலம் இருபது பேருக்கல்ல, சுமார் இருபதினுயிரம் பேருக்கு இதை அனுப்பியிருக்கிறேன், எனக்கு என்ன நேரப் போகிறதென்பதை மிகவும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறேன். அறுபதினுயிரம் அல்ல ஆருயிரம் வந்தால் போதும்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட வியட்னும் மீதான விமான தாக்குதலை அமெரிக்கா நிறுத்தினுல் தீர்வு ஏற்படலாம்

## ஜோன்சனிடம் கொஸிஜின் கூறியதாக ராஜாங்க காரியதரிசி ரஸ்க் தகவல்

## 'வட வியட்னும் மீது போர் தொடுக்கும் எண்ணம் கிடையாது'

வாஷிங்டன், ஜூலை 31

கடந்த மாதம் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினுக்கும், அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுக்குமிடையே கிளாஸ்பரோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, வட வியட்னும் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்தினுல், வட வியட்னுமியரைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இறங்கச் செய்யும் முயற்சி சுலபமாக இருக்குமென ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனிடம் தெரிவித்ததாக அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் இங்கு தகவல் வெளியிட்டார்.

தென் வியட்னுமில் தனது இராணுவ நடவடிக்கைகளை ஹனேய் நிறுத்தினுல், அமெரிக்கா வட வியட்னும் மீதான விமானத் தாக்குதலையும் நிறுத்துமென இதற்கு அமெரிக்க ஜனதிபதி பதிலளித்ததாகவும் திரு. ரஸ்க் தெரிவித்தார்.

வடவியட்னும் மீது அமெரிக்கா குண்டு வீசுவதை நிறுத்தினுல், பதிலுக்கு வட வியட்னும் என்ன நடவடிக்கையெடுக்குமென்பது பற்றி ரஷ்யப் பிரதமர் எதுவும் குறிப்பிடவில்லையென்று திரு. ரஸ்க் கூறினர்.

அமெரிக்க செனட் வெளிவிவகாரக் கமிட்டி முன்னுல் சாட்சியமளித்த போதே, மேற்குறிப்பிட்ட தகவல்களை திரு. ரஸ்க் வெளியிட்டார்.

எதிர்த்தரப்பினரிடையே என்ன விளைவுகளை ஏற்படுத்துமென்பதைத் திட்டவட்டமாகக் அறியாதவரை, வட வியட்னும் மீதான விமானத்தாக்குதலை அமெரிக்கா நிறுத்த முடியாது என்று திரு. ரஸ்க் தமது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டார்.

### போர் தொடுக்க விருப்பவில்லை

வட வியட்னும் மீது அமெரிக்கா போர் தொடுக்க வேண்டுமென்ற கருத்தை திரு. ரஸ்க் நிராகரித்தார்.

போர் தொடுப்பதன் நோக்கம், அழிப்பதாகவே இருக்கும். வட வியட்னுமை அழிக்கும் நோக்கம் அமெரிக்காவுக்குக்கிடையாது. தென் வியட்னுமில் ஆக்கிரமிப்பை ஒழித்து. அங்கு அமைதியை நிலைநாட்டுவதே அதன் நோக்கமாகும்' என்ருர் திரு. ரஸ்க்.

# மத்திய பிரதேசத்தின் புதிய முதல் மந்திரி

## திரு. கோவிந்த நாராயண்சிங்

போபால், ஜூலை 31

மத்திய பிரதேசத்தின் புதிய முதல் மந்திரியாக திரு. கோவிந்தநாராயண் சிங் நேற்று மாலை இங்கு பதவியேற்ருர்.

இவருக்கு இப்போது 47 வயது. 1952-ல முதற் தடவையாக மத்தியப் பிரதேச அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலந் தொட்டு அவர் ஒரு சட்ட சபை உறுப்பினராக இருந்து வருகிருர். முந்திய மிஸ்ரா மந்திரிசபையில் இவர் ஒரு மந்திரியாகக் கடமையாற்றியவர். ஆனுல், இப்போது பதவியிழந்த மிஸ்ரா மந்திரி சபையில் அவருக்கு மந்திரிப் பதவி அளிக்கப்படவில்லை. காங்கிரஸிலிருந்து விலகி சம்யுக்த தளத்துடன் சேர்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

புதிய மத்திய பிரதேச மந்திரி சபையின் முழு விபரங்களும் பின்னர் தெரிவிக்கப்படுமென்று திரு. கோவிந்த நாராயண் சிங் நேற்று அறிவித்தார்.

### உணவு உற்பத்தி

ராஜ்யத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதே தமது அரசாங்கத்தை நோக்கியுள்ள முக்கிய கடமையென முதல் மந்திரி திரு. கோவிந்த நாராயண்சிங் நிருபர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

உணவு உற்பத்தியைப் பெருக்கப் போதிய பாசன வசதி தேவையென்றும் இந்தப் பணிக்காகவே தமது அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளுமென்றும் அவர் மேலும் கூறினர்.

### முடிவை மாற்ற முடியாது

மத்திய பிரதேச காங்கிரஸ்கட்சியின் தலைமையிலிருந்து தாம்ராஜினுமாச்செய்வதென்ற முடிவைத் தம்மால் மாற்றமுடியாது என்று பதவியிழந்த முதல் மந்திரி திரு. டி. பி. மிஸ்ரா நேற்று அறிவித்தார்.

காங்கிரஸ்கட்சியின் கூட்டமொன்றில, திரு மிஸ்ராவின் ராஜினுமாவைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், அவரே தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கவேண்டுமென்றும் அங்கத்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

ஆனுல், அவர்களின்வேண்டுகோளுக்கு திரு. மிஸ்ரா உடன்பட மறுத்துவிட்டார். வேண்டுமென்ருல், இன்று மட்டும் தாம் சட்ட சபையில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இயங்குவதாக அவர் தெரிவித்தார்.

### பஞ்சாப் பிரதமர் கருத்து

மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் மந்திரி சபை வீழ்ச்சியடைந்தது, காங்கிரஸின் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்க்கும் ஜனநாயக சக்திகளுக்குக்கிடைத்த வெற்றி என்று பஞ்சாப் முதல் மந்திரி திரு. குர்ணும் சிங் சண்டிகாரில் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

# விமானந்தாங்கி கப்பல் தீவிபத்தில் 200 அமெரிக்கர் மாண்டனர்

சைகோன், ஜூலை 31

அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலான 'பொரெஸ்டால்' தீ விபத்தில் மாண்டவர் தொகை இப்போது 200 எனக் கணிக்கப்பட்டுள்ளது. மற்றும் 112 பேரை காணவில்லை. 80 பேர் காயமுற்றுள்ளனர்.

இத் தீ விபத்தினுல், வட வியட்னும் மீதான அமெரிக்க விமானத் தாக்குதல் பெருமளவு குறைந்துள்ளது.

நாளுக்குச் சராசரி 40 விமானத் தாக்குதலை நடாத்தும் அமெரிக்கரால் இப்போது ஆக 6 தாக்குதல்களையே நடாத்த முடிகிறது.

# வெவ்வேறுராஜ்யங்களுக்கிடையே மத்திய அரசு வேறுபாடு

## நிரூபித்தால் அபராதம் செலுத்த தயார் என்கிருர் திரு. தேசாய்

சென்னை, ஜூலை 31

வெவ்வேறு ராஜ்யங்களுக்கிடையே மத்திய அரசாங்கம் வேறுபாடு காட்டுகின்றது என்பதை நிரூபித்தால் அது அதற்கான அபராதத்தைச் செலுத்தத் தயாராகவுள்ளது என்று சென்னை வந்துள்ள இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், பத்திரிகை நிருபர்களிடம்பேசுகையில்கூறினர்

ராஜ்யங்களுக்கு உணவு உற்பத்திக்கு உதவி செய்ய வேண்டி, மத்திய அரசாங்கம் 118 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதென்ருர் அவர் இத்தொகையினுல், நாட்டு மக்களில் எட்டில் ஒரு பங்கினர் மட்டுமே பயன் பெற முடியும். எல்லா மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்த உதவியை அளிப்பதானுல், 118 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் 1000 கோடி ரூபாயாக்க வேண்டியிருக்கும். இவ்வாறு குறிப்பிட்டார் துணைப் பிரதமர்.

### சேலம் தூத்துக்குடித் திட்டங்கள்

சேலம், தூத்துக்குடி திட்டங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், இத் திட்டங்களை மத்திய அரசாங்கம் நிராகரித்து விட்டதாகவோ அல்லது நிறைவேற்ற மறுத்து விட்டதாகவோ கூற முடியாது என்ருர்.

ஒரு திட்டத்தை அமுல் செய்ய முன்னர், அதனுல், ஏற்படக் கூடிய பொருளாதார நன்மைகள், அத்திட்டத்துக்குத் தேவையான நிதி போதியளவு இருக்கிறதா என்பன பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறிய துணைப் பிரதமர், சேலம், தூத்துக்குடி திட்டங்கள் பற்றியும் அதே விதத்தில் தாம் ஆராய விரும்புவதாகத் தெரிவித்தார்.

## கும்பாபிஷேகம்

சங்கானை, திங்கள்

சண்டிருப்பாய் ஹரிஹர ஐயனர் கோவிலில்கடந்த48 நாட்களாக தொடர்ந்து நடைபெற்றுவந்த கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகத்துடன் முடிவடைந்தது.

# இராணுவ விலக்கு பிராந்தியத்தில் புகுந்த அமெரிக்க துருப்புகள்

## வியட்காங்கியரின் வலையில் சிக்கிவெளியேறினர்

சைகோன், ஜூலை 31

வியட்னுமில் இராணுவ விலக்குப் பிராந்தியத்தினுள் புகுந்த 800 அமெரிக்கத் துருப்புகள், வியட்காங்கியரின் வலையொன்றினுள் சிக்கிக்கொண்டனர்.

இந்த 800பேரில் 23போர் வீரர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயத்துக்குள்ளாகினர். மற்றவர்கள் இராணுவ விலக்குப் பிராந்தியத்தியத்திலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

இச் சண்டையில் 40 வட வியட்னுமியரைக் கொன்றதாகவும், 150 விருந்து 200 வரை காயப்படுத்தியதாக அமெரிக்கர் அறிவித்துள்ளனர்,

# 'வியட்னும் போர் தேவையற்ற தொன்ருகும்'

## யு தாண்ட் கருத்து

வாஷிங்டன், ஜூலை 31

'வியட்னுமில் நடைபெறுவது தேவையற்ற போர் ஒன்ருகும்' என ஐ.நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட், வடகரோலினுவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

'வியட்னும் போர்பற்றி அமெரிக்கா சரிவரப் புரிந்து கொள்ளாதவரை, அங்கு நடைபெறும் சண்டைக்கு ஒரு முடிவு ஏற்படாது' என்ருர் யு தாண்ட்.

'வியட்னுமில், தேசிய சுதந்திரத்துக்கான போர் நடைபெறுகிறது; கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புப் போர் அல்ல. இதை அமெரிக்கர் உணர்ந்துகொள்ள வேண்டும்' இவ்வாறு யுதாண்ட் குறிப்பிட்டார்.

வியட்னும் பிரச்னைக்குப் போர்மூலமன்றிப் பிற வழிகளில் தீர்வுகாண முடியுமெனத் தாம் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினர்.

### வல்லரசுகள் போட்டி

மேற்குஆசியாவில் நடந்து முடிந்த போர் பற்றி யுதாண்ட் குறிப்பிடுகையில், வல்லரசுகளுக்கிடையே இருந்த தகராறுதான் ஐ.நா அப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணமுடியாமற்போன துக்குக்காரணம் என்ருர். வியட்னுமில் தீர்வுகாண்பதற்கு இடையூருக இருப்பதும இந்த வல்லரசுகளின் போட்டியேயாகும் என்ருர் யுதாண்ட்.

# வெனிசூலா நில அதிர்ச்சியில் 100 க்கு மதிகமானேர் மரணம்

கராக்கஸ், ஜூலை 31

தென்அமெரிக்கக் குடியரசான வெனிசூலாவின் தலைநகரான கராக்கஸில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நில அதிர்ச்சியினுல் 100க்கு மதிகமானேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் 1000 பேர் காயமடைந்துள்ளதாகவும், கராக்கஸில் மட்டும் ரூபா 10 லட்சத்துக்கும் அதிகமான பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனம், அரசாங்க இலாகாக்களில் புதிய நியமனம்:

# 'சிங்களத்தகுதி ஒரு நிபந்தனையென விளம்பரப்படுத்தியது தவறு'

## 'நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி'

### வட்டுக்கோட்டை எம். பி. தகவல்

சங்கானை, திங்கள் "1966 ம் ஆண்டு தை மாதம் 8-ம் திகதி பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி(விசேஷ) மசோதாவின்படி கூட்டுத்தாபனங்களிலோ, அரசாங்க இலாகாக்களிலோ உத்தியோக நியமனம் பெறுவதற்கு நியமிக்கப்படும் பொழுது சிங்களமொழியில் வேலைசெய்யும் அறிவு இருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கமுடியாது. இதை நன்கு அறிந்திருந்தும் வருப்புவாதிகளான சிலரின் சதியால் சிங்கள அறிவு தேவையென்று விளம்பரப்படுத்தப்படுகிறது. இதை நாம் பிரதம மத்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்த பொழுது அவர் சிங்களத் தகுதி ஒரு நிபந்தனையாக விளம்பரப்படுத்தப்பட்டது தவறுஎன்றும்அப்படி விளம்பரப்படுத்துவதற்குபொறுப்பாகவிருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உறுதி கூறினர்."

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னர். மாணவர் ஒருவர் கேட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு பதில் சொன்னர்.

மாணவர் பேரவையினுல் திரு. அமிர்தலிங்கம் மாவட்டசபை பற்றிப் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

"அரசாங்க — அரசாங்க கூட்டுத்தாபன வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் இதற்குமேல் கோரப்படும்பொழுது இந்த நிபந்தனையை நீக்கிவிடும்படி ஒரு சுற்றுநிருபமூலம் உத்தரவிட உடன் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் பிரதமர் தமக்கு உறுதி கூறியிருப்பதாக அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பொருட்காட்சி

## திறப்பு விழா சொற்பொழிவில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

### வரவேற்புக்குழுத் தலைவர் விளக்கம கோரப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்தில் சென்ற வியாழக்கிழமை சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனவினுல் ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்பட்ட கைதொழில் விவசாயப்பொருட்காட்சி திறப்புவிழாவில் உரையாற்றியவர்களது சொற்பொழிவுகள் தமிழில் மொழிபெயர்க்கப்படாதுவிட்டதற்கான காரணத்தை விரைவில் விளக்குமாறு பொருட்காட்சி வரவேற்புக்குழுத் தலைவர் கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அன்றையதினம் சுகாதார அமைச்சர் திரு. ஜெயவர்த்தன உதவி உணவு அமைச்சர் திரு. இம்புலான, அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சுக்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படாததால் அங்கு வந்திருந்த பொது மக்களும், முக்கியமாக விவசாயிகளும் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் ஆகியோரது சொற்பொழிவுகளை விளங்கிக்கொள்ள முடியாமலிருந்ததாகவும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதன் காரணமென்னவெனவும் பலர் சம்பந்தப்பட்ட விழாச்சபையினரைக்கேட்டதைத் தொடர்ந்தே இவர்கள் வரவேற்புக்குழுத் தலைவரை விளக்கம் கோரியுள்ளதாகத் தெரிகிறது.

இப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்க இலாகாக்களின் காட்சிச்சாலைகளிலும் தமிழ் புறக்கணிக்கப் பட்டுள்ளதாகவும் பலர் புகார் செய்துள்ளதாகவும் தெரிகிறது. [ந. நி.]

## 'வாலிபர்கள் ஊக்கம் வேண்டும'

யாழ்ப்பாணம், செவ்வாய் "அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய நாடெங்கிலும் 1000 நெசவுநிலையங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு நெசவு நிலையத்திலும் 25 பேர் கடமையாற்ற அமர்த்தப்படுவார்கள். இத் திட்டத்துக்கமைய இப்போது அரைவாசி நெசவு நிலையங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இத்தொழிலில் அதிக ஊக்கம் படித்த வாலிபர்களும் மாணவர்களும் காட்டினுல் நம் நாட்டையும் செழிப்புள்ள நடாக்க முடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை."

மேற்கண்டவாறு நல்லூர் அரசினர் நெசவு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடமையாற்றிய திரு. பொன்னுத்துரையும், திருமதி தையல்நாயகியும் பதவி உயர்வு பெற்றதை முன்னிட்டு 1966-ம், 67-ம் ஆண்டில் இங்கு பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களால் அளிக்கப்பட்ட உபசரணைவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குடிசைக் கைத்தொழில் இலாகா அதிபர் திரு. கந்தவனம் குறிப்பிட்டார்.

பதவி உயர்வு பெற்ற இரு ஆசிரியர்களினதும் சேவையைப் பாராட்டிப் பலரும் பேசினுர்கள். [ந. நி]

## 'தமிழே போதனு மொழியாகவேண்டும'

யாழ்ப்பாணம், செவ்வாய் "தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியே போதனு மொழியாக இருக்கவேண்டும். பெற்றோர்கள் விரும்பினுல் தங்கள்பிள்ளைகளுக்கு ஆங்கிலம் சிங்களம் ஆகிய மொழிகளைக்கற்பிக்கலாம்".

கோண்டாவில் மேற்கு சைவத்தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில கல்வி ஆலோசகர் திரு. இ. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினுர். விளையாட்டுப் போட்டிகள் பாடசாலைக் கொடியேற்ற வைபத்துடன் ஆரம்பமாகியது. போட்டியில் பங்குபற்றிய வீரவீராங்கனைகளுக்கு திருமதி அ. திருநாவுக்கரசு அவர்கள் பரிசுப் பத்திரங்கள் வழங்கினுர்.

அப்பர்இல்லம் 183 புள்ளிகளைப் பெற்று இவ்வருடச் சாம்பியனுகியது. இவ்வருடங்களிலும் இல்லமே முதலிடத்தைப் பெற்றுவந்தது. மற்றும் சுந்தரர் இல்லம் 174 புள்ளிகளையும், சம்பந்தர் இல்லம் 173புள்ளிகளையும்பெற்றன.

## புதிய ஜே பிக்கு அமைச்சர் பாராட்டு

கொம்பனித்தெரு, திங்கள் பிரபலவர்த்தகரான திரு. கா. மதியாபரணம் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டதைப் பாரரட்டுமுகமாக கொழும்பு வை. எம். பி ஏ. மண்டபத்தின் கொழும்பு மாநகரசபைஅங்கத்தவர் த. நீதிராசாஜே. பி. தலைமையில் நடைபெற்ற பரராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் வாணிபத்தில் தமிழர்கள் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதை சரித்திரம் நன்கு புலனுக்கிறது. அவ்வித வாணிபத்தில் உழைத்து சைவத்தையும் கலை, கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு பாடுபட்ட ஒரு தொண்டரான திரு. மதியாபரணத்துக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டுள்ளது மிக்க பொருத் தமானதொன்று" றென்ருர்.

சமாதான நீதவானின் கடமைமிக உன்னதமானது. உயர்ந்தது என்றும் இதனை திரு மதியாபரணம் சீராக நிறைவேற்றுவார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லையெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## செலவினங்களுக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செவ். பருத்தித்துறை நகரசபையில் நடைபெற்ற விஷேச கூட்டமொன்றில் நகரசபையின் வரவு செலவுதிட்டத்திலுள்ள செலவுகளைக்கட்டுப்படுத்தப்பட்டதான தகவல் அங்கத்தவர்களுக்கு உபதலைவர் திரு. வே. நாகநாதனுல் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமான கடிதம் பருத்தித்துறை நகரசபைத் தலைவருக்கு ஸ்தலஸ்தாபன ஆணையாளர் காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## நோயாளிக்கு பணஉதவி

சுழிபுரம், திங்கள் யாழ். மாவட்ட புற்று நோய் தடுப்புச் சங்கத்தினர் வடமராட்சிப்பகுதியிலுள்ள புற்றுநோயாளர் ஒருவருக்கு நன்கொடையாகப் பணம் வழங்கியுள்ளனர். புற்று நோயினுல் அவதிப்படும் அந்நோயாளிக்கு பணஉதவி புரியுமாறு வடமராட்சிப் பிரிவு காரியாதிகாரி யாழ். மாவட்ட புற்று நோய் சங்கத்தினரை வேண்டியிருந்தார். அவருடைய வேண்டுதலைஏற்று மேற்படி சங்கத்தினர் பண உதவி புரிந்துள்ளனர்.

## இன்று

### காணிக் கச்சேரி

உடுப்பிட்டி, செவ். யாழ்ப்பாண மாவட்டத்தில் உடையார் கட்டுக்குளத்திட்டத்தில் காலியான துண்டுக் காணிகளை இளைஞர்கட்கு வழங்கத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோரில் (இன்று) செவ்வாய்க் கிழமைநடாத்தப்படும். இக் குடியேற்றத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு இளைஞருக்கும் 3 ஏக்கர் நெற் செய்கைக் காணியும், 2 ஏக்கர் தோட்டப் பயிர்ச் செய்கைக் காணியும் வழங்கப்படும்.

யாழ்.

## பழைய தபாற்கந்தோர் உப தபால் நிலையமாகும்

யாழ்ப்பாணம், செவ். பழைய யாழ்ப்பாண தபாற்கந்தோர் உபதபாற் கந்தோராக மாற்றப்படவிருக்கிறது. தற்போதுவெறுங் கட்டிடமாக இருக்கும் பழைய தபாற் கந்தோரை உபதபாற் கந்தோராக்கும்படி யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பொதுமக்கள் கோரியிருந்தனர்.

திரு. ஜி. ஜி பொன்னம்பலம் கொழும்பு தபால் தந்திப்பகுதி அதிபருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது யாழ்ப்பாண பழைய தபாற்கந்தோரை கூடியசீக்கிரம் உபதபாற்கந்தோராக்குவதாக உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## இடமாற்றம்

சங்கானை, திங்கள் வடலியடைப்பு நெசவு நிலையத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி சி. நல்லம்மா இம்மாதம் 15-ம் திகதி முதல் சங்கானை கிழக்கு நெசவு நிலையத்திற்கு மாற்றலாகியுள்ளார்.

## தனித்தியங்கும

சுன்னுகம், திங்கள் இதுவரை காலமும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் கீழ் இயங்கிவந்த "சன்மார்க்க இளைஞர் சங்கம்" இனிமேல் சன்மார்க்க சபையின் தலையீடின்றி தனித்தியங்க முடிவுசெய்துள்ளது.

## திருப்பணிவேலை பூர்த்தி

உடுவில். திங்கள் மாகியப்பிட்டி அங்கணம்மைக்கடவை மீனுட்சி அம்மன் கோவில் புனரமைப்புத் திருப்பணி வேலைகள் யாவும் பூர்த்யடைந்து வருகின்றன. ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறவிருக்கின்றது.





கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு

ஓர் நற்செய்தி

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.



மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

அன் சிலோன இன்டஸ்றியல் இன்ஜினியரிங் வேக்ஸ்

150, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'நஷ்டஈடு அல்லது வேலை கொடுக்கவும்'

### கி. ச. தீர்மானம்

கோண்டாவில், திங்கள்

ஏழாலைக் கிராமச் சபையின் மாதாந்த கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

''சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தோருக்கு திரும்பவும் அவர்களை எடுத்து வேலை கொடுக்கவேண்டுமென்றும் அது தவறுமிடத்து அவர்களது முழுநஷ்டஈடும் கொடுக்கவேண்டும் எனவும் இச்சபை ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.''

இத்தீர்மானம் கௌரவ பிரதமஅமைச்சர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் பா. உ, சிங்களச் சட்டத்தால் வேலை இழந்தோர் கழகச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ். 1-8-67

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள் 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 குதூகலம் 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதசுரம், 10-00 தேர்ந்த இசை.

# 'விற்பனை வரியைநீக்க முயற்சி எடுப்பேன்'

## சுருட்டு தொழிலாளர் தூது கோஷ்டியிடம் ஜி. ஜி. உறுதி

யாழ்ப்பாணம், செவ்.

'விற்பனை வரியை முற்றாக நீக்க முயற்சி எடுப்பேன்' என்று இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க தூது கோஷ்டியிடம் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

விற்பனை வரியை 5 சத வீதத்திலிருந்து 1 சத வீதத்திற்கு குறைத்ததையிட்டு இலங்கை சுருட்டுதொழிலாளர் சங்க தூதுகோஷ்டி யாழ்ப்பாணம் எம். பி.க்கும் மற்றும் வவனியா, உடுப்பிட்டி எம். பிக்களுக்கும் நேரில் பாராட்டுத் தெரிவித்தது.

கடந்த ஒருவருட காலமாக, விற்பனை வரியை நீக்க யாழ்ப்பாண எம். பி. எடுத்து வந்துள்ள முயற்சி வெற்றியளித்திருப்பதாகவும், விற்பனை வரியை முற்றாக நீக்க முயற்சி எடுக்குமாறும் தூது கோஷ்டி கேட்டுக் கொண்டது.

நிதி மந்திரி திரு. யூ. பி. வன்னியநாயக்காவிற்கும். யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலத்திற்கும் வரவேற்பளிக்க இலங்கை சுருட்டுத்தொழிலாளர், சங்கம் தீர்மானித்திருப்பதாகஅறியப்படுகிறது.

[அ.நி.]

### சண்டிலிப்பாய் வென்றது

உடுவில், ஞாயிறு

சண்டிலிப்பாய் இளைஞர் விளையாட்டுக் கோஷ்டிக்கும் உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் சிநேகபூர்வமான ஓர் உதைபந்தாட்டப் போட்டிநடைபெற்றது. சண்டிலிப்பாய் கோஷ்டியினர் 4 கோல்களையும் ஸ்டார் கோஷ்டி ஒரு கோலையும் பெற்றுக் கொண்டன. என். எஸ். நித்தியானந்தன் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## இவைகள் சாம்பியன்

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை வலைப்பந்தாட்டச்சங்கத்தின் ஆதரவில் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் மேற்பிரிவில் கொழும்பு மாநகரசபைக் கோஷ்டியும், மத்தியபிரிவில் பம்பலப்பிட்டி கன்னியபாடசாலைக் கோஷ்டியும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப் பட்டன.

மேற்பிரிவுச் சாம்பியன் போட்டியில் கொழும்பு மாநகரசபைக் கோஷ்டி 32-16 புள்ளிகளால் பி சி. சி. கோஷ்டியைத் தோற்கடித்தது.

மத்தியபிரிவுச் சாம்பியனை பம்பலப்பிட்டி கோஷ்டி 36-4 புள்ளிகளால் யாழ்ப்பாணக் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிகளுக்குத் தலைமை வகித்த யாழ்ப்பாண கல்விப் பகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

### விளையாட்டுப்போட்டி

சுன்னாகம், திங்கள்

சுன்னாகம் கோட்டைக்காடு பொன்கந்தையா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை நடைபெறும்.

### உதயசூரியன் வெற்றி

உடுவில், ஞாயிறு

சுதுமலை உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தினருக்கும், உடுவில் வடக்கு தெரிவுக் கோஷ்டியினருக்குமிடையில் உடுவிலில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் உதயசூரியன் கோஷ்டியினர் 5-2 கோல்களால்உடுவில் தெரிவுக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். எஸ். எம். பரராசசிங்கம் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## வரிவிளம்பரம்

### தேவை

**ஆசிரியை**

அண்மையில், மூளாயில் ஆரம்பிக்கப்பட விருக்கும் எனது நிலையத்தின் கிளையில் பாலர் வகுப்பு நடாத்த (MONTESSORI) தராதரமுள்ள ஆசிரியை உடனே தேவை. கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி. 2459

**ஆசிரியர்கள்:**

அண்மையில், மூளாயில் ஆரம்பிக்கப்பட விருக்கும் எமது நிலையத்தின் கிளையில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, புத்தகவைப்பு முறை, கணக்கியல் முதலிய வர்த்தக பாடங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உடனே தேவை. கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி. 2458

**ஆசிரியர்கள்:**

அண்மையில், மூளாயில் ஆரம்பிக்கப்பட விருக்கும் எமது நிலையத்தின் கிளையில் தையற்கலையும், கலைப்பிரிவில் எல்லாப் பாடங்களும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உடனே தேவை. கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி. 2457

**ஆசிரியர்கள்:**

அண்மையில், மூளாயில் ஆரம்பிக்கப்பட விருக்கும் எமது நிலையத்தின் கிளையில் G C. E. உயர்தர வகுப்பு வரையில் விஞ்ஞான, கணித வகைப்பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உடனே தேவை. கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி. 2456

### விற்பனைக்கு

**கார்:**

E Y ஏழாயிரம் தொடரில் நல்ல நிலமையிலுள்ள சோமசெற் கார் விற்பனைக்குண்டு. 71, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் பார்வையிடலாம். 2453

### தேவை

**மனேஜர்**

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கூட்டுறவுப் பயிற்சியுடனும் கல்விப் பொதுத்தராதரம் (சாதாரணம்) உடைய மனேஜர் தேவை. மாதம் ரூபா 100 சம்பளமும், போனஸ், தகைமைக்கேற்ப சம்பள உயர்வும். பிணைப்பணம் ரூபா 1000/- உறுதிப்பிணை 2000 ரூபா. முடிவுதிகதி 8-8-67. காரியதரிசி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி. 2461

## விளையாட்டுக்கழகம் அங்குரார்ப்பணம்

பண்டத்தரிப்பு, திங்கள்

''இளைஞர்கள் சோம்பலினால் நேரத்தையும் உடலையும் கெடுத்துக் கொள்கின்றனர். இதையுணர்ந்தே கிராமங்களிலும் நகரங்களிலும் அரசினர் விளையாட்டுக் கழகங்களை நிறுவி அவற்றின் மூலம் இளைஞரை விளையாட்டுகளில் ஈடுபடச் செய்கின்றனர்'' என இளவாலை சென்ஜோன்ஸ்விளையாட்டுக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் [illegible]. மேற்கு விளையாட்டுப் பிரிவு உத்தியோகத்தர் திரு. ரி. நடராசா கூறினர். கழகநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் எஸ். சூசைப்பிள்ளை, தலைவர் எஸ். இ. எம். யோசவ், உப தலைவர் என். செபஸ்தியாம்பிள்ளை, காரியதரிசி ஏ. எல். ரத்தினம், உப காரியதரிசி ஏ. இ. வின்சன், தனாதிகாரி என். பி. இராசநாயகம், உப தனாதிகாரி எம் இம்மானுவல். ஜி. ஞானச்சந்திரன், எச். தேவசகாயம், ஜே. ரத்தினராசாஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரியப்பட்டனர்.


## இரண்டாவது வாரம்!

| | |
|---|---|
| லிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | காமினி [மருதானை] |
| ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை] |

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி

அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்

ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி

நடித்த





ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்

# அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்

இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

**ராஜா RAJAH**

யாழ்ப்பாணம் JAFFNA.

தினசரி 2-30, 6-30, 9-45

பேரயாதினங்களில் 4காட்சிகள்

கண்ணதாசன்

கே. ஆர். விஜயா

நடித்த

**கறுப்புப்பணம்**

**நியூ காலிங்கன்**

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

சிவாஜி - பத்மினி

நடித்த

**பாக்கியவதி**

**மனோஹரா**

[யாழ்ப்பாணம்]

தினசரி 6-30, 9-45

ஆனந்தன், வீரப்பா, தேவிகா

நடித்த

**'நீயா நானு'**

**REGAL JAFFNA**

Time: 4-30, 7-00 p. m. 9-45 p. m.

Gregory Peck

Anthony Quinn

in

Behold a Pale Horse

**THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY**

3rd Term re-opens on 21-8-67

Classes for the Engineering Institution Examinations Part I in Mechanical Givil & Electrical will commence on 21-8-67. Minimum Educational Qualification English G. C. E. (O. L.) Level.

Pure Maths or Applied Maths - G. C. E. 'A' Level Physics G. C. E. 'A' Level.

Two other subjects - G. C. E. 'O. L. Level.

For further particulars call over personally.

A good opportunity for those who fail to qualify for entry to the University.

31-7-67 Director.

# ஜெனரல் இண்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான

ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டட தளபாடங்கள்

றப்பர் பொம்மைகள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி றேட், — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் றேட், யாழ்ப்பாணம்

போன்: 7024


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பத்மினி கொலை வழக்கு

# ஆகஸ்ட் 9-ம் திகதி வரை எதிரிகளுக்கு றிமாண்ட்

காலி, ஞாயிறு

பத்மினி குலரத்தின கொலைவழக்கு இன்று மீண்டும் காலி நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் மேல்விசாரணை ஆரம்பமானபோது மூன்று பொலிஸ் அதிகாரிகளும், ஒரு படப்பிடிப்பாளரும், ஒரு தந்தித் தொடர்பு இன்ஸ்பெக்டரும் சாட்சியமளித்தனர்.

துப்பறியும் பகுதியைச் சேர்ந்த புகைப் படப்பிடிப்பாளர் திரு. டபிள்யு. டி. ஜேமிஸ் டி அல்விஸ் சாட்சியமளிக்கையில், காலஞ்சென்றவரின் வீட்டில் 15 படங்கள் எடுத்தேன். அவைகளைக் கோர்ட்டில் சமர்ப்பித்திருக்கிறேன். ஒரு தடவைக்குமேல் படம் எடுத்துள்ளேன் என்றார்.

காலி தந்தித் தொடர்பு இலாகா இன்ஸ்பெக்டர் திரு. ராமநாதன் பத்மேஸ்வரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

முதலாவது எதிரியின் வீட்டில் டெலிபோன் ஒன்று இருக்கின்றது. அதன் இலக்கம் 365' அவர் வீட்டிலிருந்து டிஸ்பென்சரிக்குத் தொடர்பு இருக்கிறது.

மேல்விசாரணை ஆகஸ்ட் 9ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. அதுவரைஎதிரிகள் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் டாக்டர் டி.ஜி.டி.குலரத்ன, அவருடைய தாயார் திருமதி லோரா குலரத்ன, அவர்களின் பணிப் பெண்களான டபிள்யு. எம். சொபியா, மொஹொதி சிஸிலின் ஆகிய நால்வரும் முதல் எதிரியின் மனைவியான திருமதி பத்மினி குலரத்னவை கொலை செய்யச் சதி செய்ததாகவும், நஞ்சூட்டிக் கொன்றதாகவும் காலி பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## ''அனுராஜன் வெற்றி''

அனுராதபுரம். செவ்.

அனுராதபுரவிளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி பொதுஜன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தது. இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட ஐந்து கழகத்தினருள்ளும் ''அனுராஜன்'' விளையாட்டுக் கழகத்தினர் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றியீட்டிய 'அனுராஜன்' விளையாட்டுக்கழகத்தினருக்கு அனுராதபுர எம். பி.திரு.கே.பி. இரத்நாயக்காவினால் வெள்ளிக் கிண்ணம்பரிசாகவழங்கப்பட்டது. ''ஸ்புட்னிக்'' விளையாட்டுக்கழகத்தினர் [றன்னேஸ்]ஒரு வெள்ளிக் கிண்ணத்தைப்பரிசாகப் பெற்றனர்.

போட்டியை ஏற்படுத்திய கழகத்தினரையும் பங்குபற்றியகழகங்களையும்எம்.பிதிரு ரத்நாயகா பாராட்டினார்.

## 'விழுந்த எனது நண்பரை கார்ட் தேடாது-ரயிலை ஓட்டினார்'

### இளைஞன் விபத்தில் சாட்சியம்

வவுனியா, திங்கள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரவீந்திரன் [வயது 19] என்னும் இளைஞன் 28-ம் திகதி அதிகாலையாழ்ப்பாணம்வந்துகொண்டிருந்த கொழும்பு மெயில்வண்டியில் பிரயாணம்செய்துகொண்டிருக்கையில்விழுந்து மரணமான சம்பவம் பற்றி வவுனியா மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பத்மநாதன் விசாரணை நடாத்தினார்.

இறந்தவருடன் பிரயாணம்செய்த நடராசா உதயகுமார் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:—

நாங்கள் கண்டியில் நடைபெற்ற பரிசளிப்புவிழா வைபவமொன்றிற்குசென்றுவிட்டு திரும்பிவந்துகொண்டிருந்தோம். எங்களுடன் 17 நண்பர்கள் வந்தனர். 28-ந் திகதி காலை இரண்டு மணிக்கு எனது நண்பர் பாலமொன்றில் அடிபட்டு கீழே விழுந்தவுடன் நான் அபாயச்சங்கிலியை இழுத்தேன். புகைவண்டி ஐந்து நிமிடங்கள் ஓடித்தான் நிறுத்தப்பட்டது. கார்ட் வந்தபொழுது நான் விபரத்தைக் கூறினேன். சங்கிலி இழுத்த குற்றத்திற்காக என்னை அவர் கார்ட் பெட்டிக்குள் வைத்துக் கொண்டு வந்து என்னை கிளிநொச்சி புகையிரதநிலையத்தில் ஒப்படைத்தார். அதன்பின்னர் நான் விபரத்தை கூறினேன். பின்னர் வவுனியா பொலிசாருடன் தொடர்புகொண்டு பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. சங்கிலிஇழுக்கப்பட்டபோது கார்ட் விழுந்தஎனது நண்பரை தேடாது தான் கிளிநொச்சிக்கு வந்தார்.''

விசாரணையின் பின்னர் விபத்தினால் ஏற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## புதிய நிர்வாகிகள்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை கடற்படை இந்துசமய பரிபாலன சபையின் 8வதுவருடாந்த பொதுக் கூட்டம் கடற்படை சிவிலியன் விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு.த. மகாதேவா, உபதலைவர் -திரு.சு, குட்டித்தம்பி, இணைக்காரியதரிசிகள்திரு கு.நமசிவாயம் திரு.எச்.விசுவநாதன், தனாதிகாரி-திரு.எஸ். திருநாவுக்கரசு, உபதனாதிகாரி- திரு. ஐ.வேதநாயகம், கணக்குப் பரிசோதகர்-திரு.எச். இராசரத்தினம்.28 உறுப்பினரை கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## நெருப்புப்பெட்டி இருந்தும் விற்காதவருக்கு அபராதம் ரூ. 300

காலி, திங்கள்

நெருப்புப் பெட்டியை விற்கமறுத்த வர்த்தகர் ஒருவர் கோர்ட்டுச் செலவாக ரூ. 300 செலுத்தவேண்டி நேரிட்டது.

ஹிக்கடுவா பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஹெனதோட்டையிலுள்ள வர்த்தகரான கே. டபிள்யு. மெண்டிஸ் சில்வா என்பவர் பி. வில்லியா என்பவருக்கு. 63 ஆனைமார்க் நெருப்புப்பெட்டிகள் வைத்திருந்தும் ஒரு நெருப்புப்பெட்டியை விற்பனைசெய்ய மறுத்ததாக சப் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். என்.பென்ஜமின் இந்தவழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

தீர்ப்பு வழங்கிய காலி கூட்டு மாஜிஸ்டிரேட் திரு. கொலின் ஈ. மெண்டிஸ் சில்வாவைக் கடுமையாக எச்சரித்தார்.

## ''மொழி வளர்ந்தால சமுதாயம் வளரும்''

(நமது நிருபர் ச. க. காசிலிங்கம்)

யாழ்ப்பாணம், திங்.

''மறைந்துபோகும் தமிழ் மொழியை அழியவிடாமல் பாதுகாக்க இதுபோன்ற கழகங்கள் உதவிபுரியும். கர்நாடகம் முதலிய சங்கீதங்கள் நம் நாட்டில் உயர்ச்சியடையும் வேளையில் நம் மொழி வளர, நம் சமுதாயம் தாமாகவே வளரும்.''

சுன்னாகம் இராமநாதன் இசைக்கல்லூரியின் நிதிக்காக கடந்த இரவு யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற இன்னிசைக் கச்சேரியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீதியரசர் திரு. வை. மாணிக்கவாசகர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நீதியரசர் திரு. வை. மாணிக்கவாசகரும், அவரது பாரியாரினதும் ஆதரவில் நடைபெற்ற இசைக் கச்சேரியில், சென்னை அரசாங்க இசைக் கல்லூரிப் பேராசிரியரும், சுன்னாகம் இசைக்கல்லூரியின் அதிபருமான பேராசிரியர் திரு. எம். ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதரின் கச்சேரி இடம் பெற்றது.

இசைக்கல்லூரிப் பொதுக் காரியதரிசி திரு. க. சிவஞானரத்தினம் நன்றி கூறினார்.

---

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்க கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் நயினாதீவு கரபந்தாட்டக் கோஷ்டியினருக்குமிடையில் அனலைதீவு தெற்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் அனலைதீவு கோஷ்டியினர் வெற்றியீட்டினர். போட்டிக்கு திரு. கணபதிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## செப்டம்பரில் 'லக்ஸல' ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் 'லக்ஸல' செப்டம்பர் மாதம் 1-ந் திகதி திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது கே. கே. எஸ். வீதியிலுள்ள புதிய கட்டடம் ஒன்றில் அமைக்கப்படுமெனவும் தெரிகின்றது.

இதற்கான விற்பனையாளர்கள், காவலாளர்களுக்கான நேர்முகப்பரீட்சைகளை மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம், சபாரத்தினம் இப்பொழுது நடாத்தி வருகின்றார். [ந. நி.]

## விசில் திறப்பு யாருடையது?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் ஒரு திறப்புக் கோர்வையுடன் பல பொருட்கள் செ. பொன்னம்மா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அத்தாட்சி காண்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 50 ரூபா கள்ள...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுவரச் சென்றனர். நாங்களும் காரிலிருந்து இறங்கி அவர்களைப் பின்தொடர்ந்தோம். அவர்கள் ஒரு வீட்டிற்குள் சென்றார்கள். நாங்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனத் தெரிவித்தோம். 2-ம் எதிரி இருபது 50 ரூபா நோட்டுக்கட்டை வைத்திருந்தார். நான் 2-ம் எதிரியின் கையிலிருந்து அவற்றை எடுத்துக்கொண்டேன். சார்ஜண்ட் மெண்டிஸ் இரு எதிரிகளையும் கைதுசெய்தார். அவர் அந் நோட்டுக்களின் இலக்கங்களைக் குறித்துக்கொண்டார்

மத்தியவங்கி நிர்வாக அதிகாரி திரு. ஏ. வீரசேகராவும் சாட்சியம் அளித்தார்.

1-ம் எதிரியின் வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் குறுக்குவிசாரணைசெய்தபோது சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் கூறியதாவது! தில்லையம்பலத்தை சந்திப்பதற்காக நான் 3 தடவைவீட்டிற்குச் சென்றேன். அவர் கிளிநொச்சிக்குப்போய்விட்டதாக அவரது மனைவி கூறினார். சோமசுந்தரம் எனது வீட்டின்ஒரு பாகத்தில் வசிக்கிறார்.

நீதி: என்ன வேலைசெய்கிறார்?—வேலையில்லை. ஒரு மாதமாக வேலையில்லாமலிருக்கிறார்.

வழக்; அதற்குமுன் என்ன செய்தார்?—2-ம் எதிரிக்குக் கீழ் வேலைசெய்தார்.

வழக்; நெல்லியடிச் சந்தையில் எத்தனை கடைகள்?—200 கடைகள்.

விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

## மாவட்ட சபை

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யோகத்தைப் பெறமுடிந்ததும் உண்மையே. ஆனால் சிங்கள மக்களின் தாய் மொழியாகிய சிங்களத்தை வேற்று மொழியினராகிய நாம் கற்று அவர்களுடன் போட்டிபோட்டு உத்தியோகம் பெறுவமென்பது கற்பனையேயாகும். மேலும் நமது பிரதேசத்தில் நமது முயற்சியில் எமது பொருளாதாரத்தை பெருக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் வேற்றுமொழிகற்று பணம் தேடநினைப்பது கையிலே நெய் இருக்க வெண்ணெய் தேடும்பேதமையே. இந்த நிலையில் ஒரு சிறு தொகையான அரசாங்க உத்தியோகங்களுக்காக ஒரு சமுதாயம் முழுவதும் சிங்களத்தைக் கற்கவேண்டுமென்பது நியாயமாகாது.

உத்தியோகம் என்று வரலாம், அதன்பின் சிங்கள பௌத்தனாக இருந்தால்த் தான் உத்தியோகம் பெறலாம் என்றும் ஒருகாலத்தில் சிங்கள ''கொயிகம'' பௌத்தனாக இருந்தால்த் தான் உத்தியோகம்பெறலாமென்ற நிலையும் வரலாம். எனவே தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியரை நியமித்து சிங்களத்தை நம் தமிழ் பாலர்களுக்கு கற்பிக்க வேண்டுமென்ற கருத்து நமக்கு உத்தியோகத்தைத் தேடித்தராது என்பது மட்டுமல்ல நமது இனத்தையே அழித்துவிடும்.

### மாவட்டசபையே வழிவகுக்கும்

இதுபோன்ற பலவற்றைச் சிந்தித்தே தமிழர்களாகிய எமது எதிர்காலம் சிறப்பாக இருக்கவும் சுயமான பொருளாதார அபிவிருத்தி பெறவும் எமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்கவும் இனம், மொழி, கலாச்சாரத்தை பேணவும் மாவட்டசபைகள் வழி வகுக்குமென்று நம்புகிறோம். இதே போல் இந் நாட்டில் உள்ள சிங்கள முஸ்லீம் மக்களையும் அவர்கள் கலாச்சாரத்தையும் மாவட்டசபைகள் பாதுகாக்கும்.

## 'வட்டிக் கொடுமைக்கு சாவுமணி அடிக்கும் ஒரே ஸ்தாபனம்'

### திருமலை மக்கள் வங்கி' திறப்பு விழாவில் நகரசபை தலைவர்

திருக்கோணமலை, திங்கள்

''அன்றும் கிடைக்கும் சிறிய ஊதியத்தைப் பெறுகின்ற எத்தனையோ ஏழைப் பொதுமக்கள் பணமின்றித் துன்பப்படும் போது பல தனிப்பட்டவர்கள் அதிக வட்டிக்குப் பணம் கொடுத்து அவர்களை மேலும் வறுமைக்குள்ளாக்குகிறார்கள். இத்தகைய ஏழை மக்களின் துயர் போக்கி அதிக வட்டிக் கொடுமைக்குச் சாவு மணியடிக்கக் கூடிய ஒரே ஸ்தாபனம் 'மக்கள் வங்கி' ஒன்றேயாகும். இத்தகு மக்கள் சேவையைப் பெரிதாய் எண்ணும் வங்கியின் கிளையொன்று நமது திருக்கோணமலையில் இன்று திறக்கப்படுவது கண்டு மகிழ்வும், பெருமிதமும்கொள்கிறேன்'' இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை காலை பத்துமணிக்கு திருமலையில் திறந்து வைக்கப்பட்ட மக்கள் வங்கிக் கிளையின் ஆரம்ப நாள்விழாவில் கலந்துரையாற்றிய திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தன் கூறினார்.

திருகோணமலை எம். பி. எஸ். எம். மாணிக்கராசா பேசுகையில் எமது நீண்ட நாள் முயற்சிக்கு இன்று தான் வழி பிறந்திருக்கிறது. இதைத் திருக்கோணமலை மக்கள் மன மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்றார்.

மற்றும் இலங்கை மக்கள் வங்கித்தலைவர் திரு. பாலபொக்க, இலங்கை மக்கள் வங்கியின் நிர்வாகக் குழு உறுப்பினரான திரு. இராசரட்ணம், திருமலை நகரசபை உறுப்பினர் திரு. வி. ஆர். நவரட்ணராசா ஆகியோரும் உரையாற்றினர். விழாவிற்குத் திருக்கோணமலை கூட்டுறவு சமாஜங்களின் தலைவரும், கூட்டுறவு பொதுச் சேவைத்துறைமுகத் தலைவருமான முகாந்திரம் முத்துக்குமாரு தலைமை வகித்தார்.

## நாட்டிலும் நகரிலும்

2ம் பக்கத் தொடர்ச்சி

மற்றது. அங்கு நடந்ததில் சொல்லப்பட்ட கைங்கரியத்தை நான் நிறைவேற்றி விட்டபடியால், மரணம் சமீபத்தில் என்னை அணுகமாட்டாதென்று நினைக்கின்றேன் சரிதானே

— வழிப்போக்கன்

## விவசாயப் பாடசாலைக்கு சிவசுந்தரம வெற்றிக்கிண்ணம

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கைப்பந்தாட்ட இறுதிப்போட்டி பரந்தன் விளையாட்டுக் கழகத்துக்கும் கிளிநொச்சி விவசாயப் பாடசாலை விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் கிளிநொச்சி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி விவசாயப் பாடசாலை விளையாட்டுக் கழகம் 2—1ஆல் வெற்றிபெற்றது.

கிளிநொச்சி விவசாயப் பாடசாலை விளையாட்டுக் கழகம் சிவசுந்தரம் வெற்றிக்கிண்ணத்தையும் பரந்தன் விளையாட்டுக் கழகம் பாஸ்கரலிங்கம் வெற்றிக்கிண்ணத்தையும் முறையே இவ்வருட முதலாம் இரண்டாம் இடத்தைப்பெற்று சுவீகரித்துக்கொண்டன.

திரு. எஸ். ஏகாம்பரம் மத்தியஸ்தம் வகித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org